<u>IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI</u>

**OS. No.** 48/2020 **Date**: 20.11.2023

**PW**1 – தங்கவேல்

<u>சாட்சி மீண்டும் முன்னிலையானதன் பேரில் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

என்னுடன் பிறந்தவர்கள் 2 அண்ணன், 1 அக்கா. என் அக்காவின் பெயர் ஈஸ்வரி, அவரது கணவர் பெயர் செலம்பு. என் அக்கா மகன்கள் பெயர் சசிகுமார், செந்தில்குமார். என் அக்கா கணவர் பெயர் சிதம்பரம் என்றால் சரியல்ல. நான் வழக்குக்காக அவருடைய பெயரை மாற்றி சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் அக்கா எடப்பாடியில் பெரிய ஏரியில் வசிக்கிறார். அவர் குட்டமனை ஐய்யங்காட்டில் வசிக்கிறார் என்றால் சரியல்ல. சசிக்குமாருக்கு என் மகளை திருமணம் செய்து கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். எனக்க தமிழ் எழுத, படிக்க தெரியாது. தாவா பரிகாரம் பற்றி தெரியும். வா.சா.ஆ.1 ற்கான முத்திரை தாளை யார் வாங்கியது என்றால் நான் தான் வாங்கினேன். வா.சா.ஆ.1 எழுதியவர் பெயர் செந்தில். வா.சா.ஆ.1 ல் ஜெகதீசன், ராஜேந்திரன் ஆகியோர் சாட்சி கையொப்பம் செய்தார்கள். தாவா கிரைய ஒப்பந்தத்தை அருணாசலம் மற்றும் அவரது மகள்கள், மகன்கள் சேர்ந்து எழுதி கொடுத்தார்கள். அருணாசலத்தின் மகள் பெயர் எனக்கு நினைவு இல்லை. மொத்தம் 1.65 ஏக்கர் நிலத்திற்கு ஒப்பந்தம் போட்டோம். அது எடப்பாடி கிராமத்தில் உள்ளது. அதன் தற்போதைய சந்தை மதிப்பு ரூ.1 கோடிக்கு மேல் என்றால் சரியல்ல. அது எடப்பாடி நகராட்சி எல்லைக்குள் உள்ளது என்றால் சரியல்ல. எனக்கு 5 ஏக்கர் நிலம் சொந்தமாக உள்ளது. அது பாசன வசதி இல்லை என்றால் சரியல்ல. எனக்கு சொந்தமான நிலத்தில் இருந்து வருடத்திற்கு அதிகபட்சம் ரூ.50 ஆயிரம் தான் வருமானம் கிடைக்கும் என்றால் சரியல்ல. ரூ.5 லட்சம் கிடைக்கும். நான் வழக்குக்காக பாசன வசதி உள்ளது என்றும் ரூ.5 லட்சம் வருமானம் வருவதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் அக்கா கணவர் சிதம்பரம் கந்து வட்டி வசூல் செய்கிறார் என்றால் எனக்கு தெரியாது. அவர் தான் பிரதிவாதிக்கு கந்து வட்டிக்கு கடன் கொடுத்துவிட்டு என் பெயரில் இத்தாவாவை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. என் அக்காவின் கணவர் 2011 ல் பிரதிவாதிக்கு ரூ.90 ஆயிரம் கடன் கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது. அதே போல் 2013 ல் செந்தில்குமார் பெயரில் பிரதிவாதி ஒரு கிரைய ஒப்பந்தம் எழுதி கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது. சிதம்பரம் பிரதிவாதிக்கு கடன் கொடுக்கும் போது வெவ்வேறு நபர்கள் பெயரில் ஒப்பந்தம் எழுதுவார் என்றால் எனக்கு தெரியாது.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக பிரதிவாதி வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி ஒத்திவைக்கப்படுகிறது.)

Sd/-தங்கவேல் Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.